முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

எம்.சி.ஓ.பி. எண். 26/2020

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி . . 1

| | | |
|---|---|---|
| பெயர் | . . | கமலகண்ணன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | . . | பாலசுந்தரம் |
| வயது | . . | 35 |
| தொழில் | . . | |
| கிராமம் | . . | |
| தாலுக்கா | . . | |

2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 17ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு. என். சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் 2ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கின்றேன். இந்த விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் டாடா ஏசி பதிவு எண். டி.என்.07 வி டபள்யூ 7247 வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் சம்பவத்தின்போது இருவருக்கு மேற்பட்ட ஆட்களை ஏற்றிச்சென்றதாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் சரக்கு வாகனம். ஆனால் விதிகளை மீறி ஆட்களை ஏற்றிச்சென்றதால் மேற்படி 2ம் எதிர்மனுதாரர் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. அதனால் 2ம் எதிர்மனுதாரரை பொருத்து மனு தள்ளுபடி

செய்யப்படவேண்டும். மேற்படி வாகனத்திற்கான காப்பீட்டு சான்று குறியீடு செய்யப்படுகிறது. **காப்பீட்டு சான்று எ.த.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

மேற்படி விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தில் மனுதாரர் பயணம் செய்துள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் இல்லை. விபத்தின்போது சரக்கு வாகனத்தில் அளவுக்கு அதிகமான நபர்களை ஏற்றிச்சென்றுள்ளதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல.